விலை ரூபா 1 - 25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 13 டிசம்பர் 23 இதழ் 288
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-11-83

# வன்செயல் புனரமைப்புக்கு இதுவரை 5 கோடி செலவு!

## பிரதமர் தகவல்

(கொழும்பு)

வன்செயலால் பாதிக்கப்பட்ட கட்டிடங்களை திருத்தவும் மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும் அக்டோபர் 30 வரை ஐந்து கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத்தகவலை பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வன்செயல் புனரமைப்புத் தொடர்பாக பிரதமர் பிரேமதாசா மேலும் தெரிவித்ததாவது.

"முகாம்களில் தங்கியிருந்தவர்களுக்கு 1 கோடி ரூபா செலவிடப்பட்டது. அகதிகளை சொந்த இடங்களுக்குஅனுப்பி வைப்பதற்கு 1 கோடி ரூபா செலவிடப்பட்டது. அகதிகளை இந்தியாவுக்கு அனுப்ப 10லட்சம் ரூபாவும் முகாம்களாக

8ம் பக்கம் பார்க்க.)

# "சமரசப் பேச்சுக்கள் தோல்வியுற்றால் தி.மு.க. இலங்கையை ஆக்கிரமிக்கும்!"

## பாராளுமன்றத்தில் 'எஸ். டி.' சூளுரை!

(இ. கந்தசாமி)

இலங்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆக்கிரமிப்பதற்காக பேச்சுவார்த்தைகள், தமிழகத்தில் நடைபெற்றுவருவதாக கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா சூளுரைத்துள்ளார்.

தி. மு. க வின் இந்த ஆக்கிரமிப்பை எதிர்க்க தேசாபிமானிகள் அனைவரும் தயாராக வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த கம்பஹா எம். பி. தொடர்ந்து பேசுகையில்,

"இந்தியாவில் நடைபெறும்

[8-ம் பக்கம் பார்க்க]

## "இந்த நாட்டு மக்கள் சர்வ முட்டாள்களா? சரத் கேட்கிறார்

(கொழும்பு)

"இந்தநாட்டுமக்கள் எல்லோரும் சர்வமுட்டாள்கள் என்ற எண்ணத்துடன் நீதி அமைச்சர் சபையில் உரையாற்றியுள்ளார்." என்று கலவான எம். பி. திரு சரத் முத்தெட்டுவேகம கருத்து வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று மேற்கண்டவாறு கூறிய திரு. சரத் முத்தெட்டுவேகம தொடர்ந்துதெரிவித்ததாவது:

"உயர்நீதிமன்றங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்கி இருப்பதால் நீதிபதிகளின் வீடுகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நீதியமைச்சர்கூறிவிட்டுப்போய் விட்டார்.

"பொறுப்பான பதவியிலிருப்பவர்கள் இப்படி நடந்து கொள்ளக்கூடாது இவ்வாறு சொல்வதன் மூலம்சபை உறுப்பினர்களை திறமையற்றவர்கள் என்று மதிக்கக்கூடாது

(இ-கு)

## "எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புலிகள்!"

(கொழும்பு)

"புலி இயக்கத்தினரே எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தை இப்பொழுதும் ஆக்கிரமித்துள்ளனர். திரு பேரின்பநாயகம் பாராளுமன்றக் கட்டத்தில் அங்கும், இங்கும் நடமாடுகிறார். அவரை பார்க்கும்போது எனது ரோமங்கள் சிலிர்க்கின்றன. அவர்கள் எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்திலிருந்து கொண்டு இந்தியாவிற்குச் செய்திகள் அனுப்புகிறார்களோ தெரியவில்லை."

"எதிர்க்கட்சித் தலைவராக சிங்களவரொருவர் தெரிவுசெய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் இன்னமும் சுத்தப்படுத்தப்படவில்லை பேரின்பநாயகம் தொடர்ந்

(8ம் பக்கம் பார்க்க)

## குற்றச்சாட்டை அநுரா மறுப்பு

### அநுரா மறுப்பு

(கொழும்பு)

"எனது செயலாளராக தமிழர் ஒருவர் இருப்பதால் அவரைப் பதவியிலிருந்து வெளியேற்றமாட்டேன்"

[8-ம் பக்கம் பார்க்க]

## "சமரசப் பேச்சுக்கள் வெற்றிபெறும்"

### பிரதி நீதி அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

"தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியாவில் நடக்கும் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இடைத் தேர்தல்களில் போட்டியிட்டு மீண்டும் இந்த சபைக்கு வரலாம்"

இவ்வாறு பிரதி நீதியமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா நேற்றுப் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி, உயர் நீதிமன்ற நீதியரசர்கள், அமைச்சரவை அலுவலகம், பாராளுமன்றம், கணக்காய்வாளர் நாயகம்,

(8-ம் பக்கம் பார்க்க)

## "சட்டத்தைப் பார்த்து சிரிக்காதீர்கள்"

### நீதி அமைச்சர் கண்டனம்

(கொழும்பு)

"இந்த நாட்டில் சகல பிரஜைகளுக்கும் ஆர்ப்பாட்டம் செய்ய உரிமை இருக்கிறது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததினால் தான், உயர்நீதிமன்ற நீதியரசர்களின் இல்லங்களுக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை"

இவ்வாறு நீதியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்ன நேற்றுப் பாராளுமன்றத்தில் அத்தனகலை எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி இது தொடர்பாகக் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையிலே கூறினார். அவர் அங்கு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை அடையாளம் காண முடியாத நிலையிலேயே பொலிசார் வழக்குத்தாக்கல் செய்யாமல் விட்டிருக்கலாம்.

"பாராளுமன்ற உறுப்பி

(8-ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் குடியேறியுள்ள இந்திய வம்சாவளி மக்களை வெளியேறுமாறு உத்தரவு!

(வவனியா)

வவனியா பகுதிகளில் குடியேறிய இந்தியவம்சாவளி மக்கள் அவர்கள் குடியேறியுள்ள காணிகளிலிருந்து வெளியேறுமாறு அரச அதிகாரிகளினால் பணிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இப்பகுதி கிராமமக்கள் தமது நிலைமையை வவனியா அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றின் மூலமாக அனுப்பி வைத்துள்ளனர்.

கலிப்பட்ட முறிப்பு, கொல்லர் புளியங்குளம், நைனாமடு. செட்டிக்குளம், கோவில் மோட்டை கிராமிய இந்திய வம்சாவழி மக்கள் வவனியா இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு. பி. மருதப்பிள்ளையின் தலைமையில் குறித்த மகஜரை நேரில்சென்று வவனியா அரச அதிபரிடம் கையளித்தனர். அம்மகஜரில் தெரிவித்திருப்பதாவது;

"இந்த நாட்டில் எத்தனையோ நூற்றாண்டு காலமாக குடியேறி நாட்டின் அபிவிருத்திக்காகப்பாடு பட்டு 85வீத ஆதாயத்தை பெற்றுத்தந்த நாங்கள் எந்தவித பிரயோசனமின்றி நாட்டிற்கு விசுவாசமுள்ளவர்களாக வாழ்ந்து இன்று வரை நாடற்றவர்களாகவே இருக்கிறோம். 1958ம் ஆண்டு முதல் இன்று வரை அடுத்தடுத்து ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு

(8-ம்பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை டிப்போ: ரூ. 72,000 துப்பாக்கி முனையில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின்பருத்தித்துறை டிப்போவிலிருந்து பருத்தித்துறை வங்கியில் வைப்பில்இட எடுத்துச்செல்லப்பட்ட 72,000 ரூபா பணம் துப்பாக்கி இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் நடந்தது. இப்பணம், பஸ்ஸில் எடுத்துச் செல்லப்பட்டபோது ஐந்து இளைஞர்கள் பஸ்ஸை வழிமறித்து துப்பாக்கி முனையில் பணத்தைக் கொள்ளையடித்ததாகப்பொலிஸில் புகார் செய்தப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. காலை 9—மாலை 6மணிக்குமிடையில் நேரில் தொடர்பு கொள்ளவும். 106, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 10146

''நல்ல இனப் பன்றிக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அண்ணா பாம், இணுவில்.'' 10155

''பண்ணையில் வளர்த்த பன்றிகளின் இறைச்சி(Pork) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: வறணி பாம், 145, நியு மார்க்கட், யாழ்ப்பாணம். 10154

5 வீடியோ டெக் 5 கலர் டெலிவிசன் 20'' 26'' 350 வீடியோ கசட்டுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- வித்தியா மோட்டோர்ஸ் 70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23255. 10193

3 பரப்பு காணி கட்டப்பிராய், கோப்பாய் தெற்கில் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ''ஷப்ரு'' 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி. இல: 22073. (10143)

வேலணை, வங்களாவடி புங்குடுதீவு ரோட்டில் இரண்டு கடைகள், பேக்கறி, வேம்பு, பனைகளுட்பட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) விபரங்கட்கு க. காங்கேசு 10/5 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 10145

யாழ் நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (9916)

மட்டுவில் பருத்தித்துறை வீதியில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் கிணற்றுடன் வீடுகட்டக்கூடிய 7பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரில் தொடர்பு கொள்ளவும். 4, ஒடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 10179

சாவகச்சேரி நகரசபையுள் கச்சாய் ரோட், முதலாம் கட்டையில் மா, பலா, தென்னை ஆகிய பயிர்வகைகளுடன் மின் இணைப்புடன் வீடுகள் அமைக்கக்கூடியதுமான ஆறுபரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: நமசிவாயம் வேலுப்பிள்ளை, ஆசிரியர், பெரியமாவடி, சாவகச்சேரி, 10184

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வைத்தியசாலைக்குச் சமீபமாக கந்தையா வீதியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி முடியப்பா பிள்ளை கணேசபதி, கந்தையா வீதி. சாவகச்சேரி. 10215

கோப்பாய் தெற்கு V. C. Lane (பருத்தித்துறை வீதியினின்று 4வது காணி) 3½பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. க. பிரகாசம், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவில். 10218

## தேவை

பெண்களின் ஆடைகள் நாகரீகமாக வெட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. சயன்ரிவிக், கட்டிங் விரும்பத்தக்கது. நேரில்:- அங்கலின் காமன்ஸ், 24/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10165

பல சிறுகைத்தொழில் தெரிந்தவருக்கு முதலீடு செய்யக்கூடியவர் தேவை. மகாதேவன், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10206

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிறுவனமொன்றிற்கு வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை (ஆண்கள் மட்டும்). கல்விப் பொதுத்தராதரம் (சாதாரணம்) பரீட்சையில் சித்தி பெற்றவராயும், ஆங்கில அறிவு உடையவராயும், நல்ல கையெழுத்துடையவராயும், நாற்பது வயதுக்குட்பட்டவராயும், இருத்தல் வேண்டும். தகமைகள், அனுபவங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து 8-12-83 க்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல. 10221, ஈழநாடு மே/பா., யாழ்ப்பாணம். (10221)

### தவறிவிட்டது

மு. தருமராசா என்பவரின் சாதகக் குறிப்புக் கொப்பி 27-11-83 காலை 9 மணியளவில் உடுப்பிட்டி சந்தியில் தவறிவிட்டது. அதை கண்டு எடுப்பவர்கள் தயவுசெய்து M P. தருமலிங்கம் உடுப்பிட்டி கடையில் ஒப்படைக்கவும். (10217)

### லொறி விற்பனை அறிவித்தல்

**காரைநகர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்க லொறி கேள்விப் பத்திரமூலம் விற்பனை செய்யப்படும்**

மேற்படி சங்க இசு லொறி 24 ஸ்ரீ/ 8714 கேள்விப்பத்திர மூலம் கூடிய கேள்விக்காரருக்கு விற்பனை செய்யப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 20-12-83 நண்பகல் 12மணிக்கு முன்னர் தலைவர், காரைநகர், பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கவும். கேள்விப்பத்திர விண்ணப்பப்படிவங்களை மீளப் பெறும் வைப்புப் பணமாக ரூபா. 1000/- வும் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூபா. 10/-ம் கட்டி காரைநகர் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் கந்தோரில் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பப் பத்திரக் கடித உறை இடது மூலையில் லொறி கேள்விப்பத்திர விண்ணப்பம் என்று குறிப்பிடவும்.

தலைவர்
காரைநகர் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்
காரைநகர்

காரைநகர்
25-11-82 10198

### வேலணை இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தினருக்கும் வேலணை இளைஞர் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியில் வேலணை இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது (கு)

### குத்தகைக்கு

கேரதீவு ஆயத்தில் உள்ள தேனீர்ச்சாலை பூநகரி ப. நோ. கூ. சங்கத்தினால் கேள்விப் பத்திரமூலம் குத்தகைக்கு விடப்படும். விண்ணப்பப்படிவமும், நிபந்தனைகளும் பிரதம சங்கத்தில் ரூ. 2/- [மீளளிக்கப்படமாட்டாது] செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரம்வைப்புப்பணமாக ரூபா. 50/- செலுத்திய பின்னரே வழங்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 1983-12-10.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்,
பூநகரி.

10187

### வெற்றுச் சாக்கு விற்பனை

3332 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. மீளளிக்கப்படாத ரூ 5/- செலுத்திக் கேள்விப்பத்திரம் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வைப்புப்பணம் ரூ. 200/- செலுத்தவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 10-12-1983. வெற்றுச் சாக்கு விபரம் பிரதம சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப.நோ கூ. சங்கம்,
பூநகரி.

10188

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

வீமன்காமத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை பூலோகசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

தாமோதரம்பிள்ளை பூலோகசிங்கம் கைம்பெண் இராசலட்சுமி- வீமன்காமம், தெல்லிப்பழை.

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல 172

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு மார்கழி மாதம் 14 ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்குஇந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற கட்டளைப்படி

ஆழ்வார்
சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
10178

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### நேபாளம் பயணம்

(யாழ்ப்பாணம்)

'குளோபல் ரெலக்ஸ் நிறுவனத்தின் தலைமைப் பொறியியலாளரும், நீர்வளச் சபையின் முன்னாள் பொறியியலாளருமான திரு ரி.குணசேகரம் தென் கிழக்காசியச் சுற்றாடல் தொடர்பாக ஆலோசனை வழங்கும் பொருட்டு நேபாளம் பயணமாகியுள்ளார்.

தென்கிழக்காசிய கூட்டுறவுச் சுற்றாடல் சங்கத்தின் அழைப்பையேற்றே இவர் அங்கு சென்றுள்ளார்.

திரு குணசேகரம் நேபாளத்தில் பத்து நாட்கள் தங்கி, சுற்றாடல் சம்பந்தமாக அங்கு இடம்பெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (வெ)

## தச்சர்கள் தேவை

### யூனிபோ-UNIFO

ஒப்பந்த அடிப்படையில் மரத் தளபாடங்கள், நிலை, யன்னல், கதவுகள் செய்வதற்கும் பொலிஷ் பண்ணுவதற்கும் உரிய திறமையான தச்சர்கள் உடன் தேவை. நற்சான்றிதழ்களுடன் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் வரவும்.

**ஐக்கிய குடும்பங்கள் கைத்தொழில் நிறுவனம்,**
பலாலி வீதி, உரும்பிராய்.

### பல் வைத்தியசாலை

## இடமாற்றம்

அண்மைக் காலம்வரை ''பதுளை பிரத்தியேகவைத்தியசாலை''யில் (The Private Hospital (Badulla) Ltd.) நடைபெற்ற பல்வைத்தியசாலை, எதிர்வரும் வியாழன் 1-12-1983 முதல் **யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 155ம் இலக்கத்தில் (புதிய 361) உள்ள கஸ்தூரியார் வளவு** (Dr. யோகு பசுபதி அவர்களின் வைத்தியசாலை) கட்டடத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**Dr. கு. சண்முகநாதன்**
B. D. S. (Cey)
(10207)

## Diploma in Computer Programming

மீண்டும் ஓர் புதிய வார இறுதி வகுப்பு
3-12-83இல் ஆரம்பமாகிறது

**செய்முறை:**
Commodore, Comp 80, Sinclair ஆகிய கொம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சியளிக்கப்படும். அத்துடன் Games புரோகிரும் பண்ணும்முறையும் போதிக்கப்படுகிறது.

**கட்டணம்:**
Level, I, II and III — 1050 ரூபா
Computer Application — 750 ரூபா
(குறிப்பு: மாணவர் தவணை அடிப்படையில் பணம் செலுத்தலாம்)

விரிவுரையாளர்: **N. S. ராஜா** B. Sc.(Hons) U. K.

புதிய வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**Digital Computer Consultants**
(Insurance Corporationற்கு முன்னால்)
615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
10192




**பிரயாணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

## ★ "அமெரிக்கா, சோவியத்யூனியன்:

# அமைதியான உலகைக் கட்டிஎழுப்ப ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்!"

## காமன்வெல்த் தலைவர்களின் கோரிக்கை

### அணு ஆயுத படைக்குறைப்புகுறித்த இந்திராவின் யோசனைகளுக்கும் வரவேற்பு!!

புதுடில்லி, நவ. 28

"அமைதியான உலகத்தைக் கட்டி எழுப்ப அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். காமன்வெல்த் அமைப்பு இந்நாடுகள் எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளித்து உதவ முடியும்" என்று காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று தினங்கள் இந்தியாவின் கோவா மாநிலத்தில் காமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் ஓய்வு எடுத்தனர். நேற்று இவர்கள் மீண்டும் தமது மகாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொடருவதற்காக புதுடில்லி வந்து சேர்ந்தனர். அப்போது அவர்கள் ஏகோபித்து மேற்கண்டவாறு கூறினர்.

கோவாவில் காமன்வெல்த் அமைப்புத் தலைவர்களுக்கு மனதைக் கவரும் வகையில் உபசாரங்களை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கோவா மாநில அரசின் அனுசரணையுடன் வழங்கினார்.

கோவாவிலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் கட்டடங்களை தலைவர்கள் பார்வையிட்டனர். காமன்வெல்த் நாடுகளின் தேசிய இசைகளை உள்ளடக்கிய இசைநிகழ்ச்சிகளும் இவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

புதுடில்லி திரும்பியுள்ள தலைவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது: 'சர்வதேச பரிவுணர்வு உலக நாடுகளுக்கிடையே இருக்க வேண்டும். படைபலம், அணுஆயுத உற்பத்தி ஆகியவற்றைக் குறைத்து உலக மக்களின் அமைதியான வாழ்க்கையை முன்விட்டு வல்லரசுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காமன்வெல்த் தலைவர்கள் படைகுறைப்பு, அணுஆயுத உற்பத்திக் குறைப்பு ஆகியவற்றை குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்த கருத்துக்களையும் வெகுவாகப் பாராட்டி வரவேற்றனர். அத்துடன் அக்கருத்துக்களுக்கு வல்லரசுகள் மதிப்பளிக்கவேண்டுமெனவும் வலியுறுத்தினர். இவ்வாறு வலியுறுத்திய தலைவர்களில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர், ஆஸ்திரேலியப் பிரதமர் திரு ஹொப் ஆகியோரும் அடங்குகின்றனர்.

காமன்வெல்த் மகாநாட்டுக்கு வந்திருந்த காமன்வெல்த் அமைச்சர்களுக்கும் ராஜஸ்தான் மாநிலத்தில் அவர்களின் ஓய்வுக்கென கடந்த மூன்று தினங்களாக பல முக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியிருந்தன. அவர்களும் நேற்று விசேட விமானத்தில் ஓய்வை முடித்த பின்னர் புதுடில்லி திரும்பினர். (க)

## ஜமாயல் இத்தாலி விஜயம்

ரோம் நவ, 28

லெபனன் ஜனாதிபதி அமின் ஜமாயல் தற்போது இத்தாலி வந்துள்ளார். அமெரிக்கா செல்லும் வழியிலேயே திரு ஜமாயல் இங்கு தரித்துச் செல்கிறார்.

திரு ஜமாயல், அமெரிக்கத் தலைவர்களுடன் லெபனனில் தற்போது நிலவும் பிரச்னைகள் குறித்து ஆராயவுள்ளார்

பெய்ரூட்டில் அமெரிக்க, இத்தாலிய, பிரெஞ்சு, பிரிட்டன் துருப்புக்கள் ஜனாதிபதி அமின் ஜமாயலின் அரசுக்கு ஆதரவாக இருந்துவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## அமெரிக்காவின் நடுத்தர ஏவுகணைகள் இத்தாலி வந்து சேர்ந்தன!

ரோம், நவ 28

இத்தாலியின் சிசிலித் தீவில் பொருத்துவதற்கென அமெரிக்காவின் குரூஸ் நடுத்தர ஏவுகணைகள் நேற்று இத்தாலி வந்து சேர்ந்தன. இத்தகவலை இத்தாலியின் பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்டது.

'நேட்டோ' நாடுகளைப் பாதுகாக்கும் விதத்திலேயே அமெரிக்கா இந்த ஏவுக்கணைகளை ஐரோப்பாவில் பொருத்த விருப்பதாகக் கூறிவருகிறது. பிரிட்டன், மே. ஜேர்மனி, இத்தாலி ஆகியனவே இந்த ஏவுகணைகளைப் பொருத்துவதற்குத் தெரிவான இடங்களாகும். பிரிட்டன், மே. ஜேர்மனி ஆசியவற்றுக்கு இந்த ஏவுகணைகள் ஏற்கனவே கொண்டு செல்லப்பட்டுவிட்டன.

இத்தாலியின் சிசிலித் தீவில் குரூஸ் ஏவுகணைகளைப் பொருத்துவதற்கான ஆயத்தங்கள் நடைபெறும் இதே வேளை பரிசுத்த பாப்பரசர் உலக சமாதானத்துக்காக தொடர்ந்து பேச்சுக்களை நடத்தும்படி சோவியத் அமெரிக்கா ஆகியவற்றிடம் கேட்டுக் கொண்டார். ரோமில் கத்தோலிக்க யாத்திரிகர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டினார். (கி)

### அமிர்தஸரஸ்

## பஞ்சாப் பொற்கோயிலில் துப்பாக்கிச் சூடு!

### இரு வழிபாட்டாளர்கள் காயம்!!

புதுடில்லி நவ, 28

பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தஸரஸ் நகரிலுள்ள சீக்கியரின் பொற்கோயிலில் இரு சீக்கிய வழிபாட்டாளர்கள்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

இவர்களுக்குஉடனேயே முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்டதால் உயிராபத்திலிருந்தும் இவர்கள் காப்பாற்றப்பட்டனர். அமிர்தஸரஸ் பொற்கோயிலில் உள்ள வழிபாட்டு மண்டபமொன்றில் அமர்ந்திருக்கும்போதே இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது.

ஆலயத்தின் எத்திசையிலிருந்து இத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதென்பது மர்மமாகவே உள்ளது. அமிர்தஸரஸ் 'பொற்கோயில்' பஞ்சாப்பில் சர்ச்சைக்குரிய தொன்ருக இருக்கிறது. இதனுள்ளேயே ஆயுதந்தரித்த சீக்கிய தீவிரவாதிகள் ஒழித்துள்ளனரென்று பாதுகாப்புச் சேவை வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன.

இத் துப்பாக்கிச்சூடு குறித்து புலன் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. (கி)


# I C M A

எமது ஸ்தாபனம் இதுவரை

3000 மாணவர்களுக்கு மேல்

I C M A பரீட்சைக்குத்

தயார் செய்ததைக் கொண்டாடுமுகமாக

I C M A மாணவர்களுக்கு

அவர்களின் கட்டணத்தில் மிகப்பெரிய

சலுகை அளிக்கப்படவிருக்கிறது.

| COURSE | FEES | DATE OF COMMENCEMENT |
|---|---|---|
| ICMA Section A | Rs. 300/- | 3-12-83 |
| ICMA Section B | Rs. 300/- | 3-12-83 |
| ICMA Part I | Rs. 300/- | 10-12-83 |

விரிவுரையாளர்கள்:

Mrs. S. சுந்தரலிங்கம், M. நல்லந்துவன்
யூஜின் மரியாம்பிள்ளை, P. சிவபாதசுந்தரன்
உட்பட பிரபலமான பலர்

இலங்கையில் கணக்கியல் துறையில் மிக அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் ஸ்தாபனம் OXONIA INSTITUTE. அதேபோன்று வடமாகாணத்தில் மிக அதிக மாணவர்களைக் கொண்டதும், 1978-ம் ஆண்டு முதல் ஸ்திரமாக நடைபெற்று 3000க்கும் அதிகமான I C M A மாணவர்களுக்குச் சேவை புரிந்து அவர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமானதும் CANTABIA INSTITUTE.

# CANTABIA INSTITUTE

21, MAIN STREET,

JAFFNA.

Phone: 24201


### ஜூலை இனக்கலவரம்:

# கைதானவர்களில் 3,000பேர் விரைவில் விடுதலை

(கொழும்பு)

கடந்தஜூலையில்நடைபெற்ற இனக்கலவரசம்பவங்கள் தொடர்பாக கைதாகி ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள 8,600 சந்தேகநபர்களில் 3,000 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கின்றனர் என்று சட்டமா அதிபர் இலாகா வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சட்டமா அதிபர் திரு. சிவாபசுபதி, பதில் சொலிஸிட்டர் ஜெனரல் திரு. திலக் மாகப்பன தலைமையில்ரேசிஷ்ட அரச சட்டத்தரணிகளை கொண்ட குழுவை நியமித்தார். இக்குழுவினர் இவ்வழக்குகளை பரிசீலனைசெய்து வருகின்றனர்.

கலவரசம்பவங்கள் தொடர்பான சந்தேகநபர்களுக்கு எதிராகக்கிடைத்துள்ள சாட்சியங்களுடன், அவர்கள் தொடர்பான பைல்களை அனுப்பிவைக்குமாறு பொலிஸ் இலாகாவிடம் சட்டமா அதிபர் கேட்டுள்ளார்.

கலவரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்களுக்கு எதிராகபோதுமான சாட்சியங்கள் இல்லாதவர்கள் விடுதலைசெய்யப்படுவார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் அவசரகாலச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டிருப்பதால் இவர்களில் பிணை வழங்கக் கூடியவர்கள் பற்றியும் இக்குழுவினர் ஆலோசிக்கவிருக்கின்றனர்.

கொழும்பு நீதிமன்றங்களில் மட்டும். சுமார் 3000 பிணை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (க)

### மன்னார் மாவட்டத்தில்

## 40 அகதிக் குடும்பங்கள்

### பழைய இடங்களுக்குச்செல்லவிருப்பம்

(மன்னார்)

அண்மையில் இடம்பெற்ற ஜூலை வன் செயல்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக மன்னார் மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள 300 குடும்பங்களில் 40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தாம் முன்பிருந்ததோட்டங்களுக்கே திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஏனையவர்கள் தாம் முன்பிருந்த தோட்டங்களுக்குத் திரும்பிச் செல்வதில்லையெனவும், தமிழ்ப் பிரதேசங்களிலேயே குடியேறவிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற முடியாதுவிட்டால் தாயகம் செல்லவிரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மன்னார்மாவட்ட அகதி முகாம்களில் தங்கியுள்ள மலையக மக்களை மீண்டும் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லவென தோட்டத்துரைமார் அடங்கியகுழு ஒன்று விரைவில் மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களையடுத்து இரத்தினபுரி, பதுளை, நுவரேலியா, ஹட்டன் ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த தோட்டங்களில் 6,877 வெற்றிடங்களும், 949 தொழிலாளர்கள் தங்குவதற்கும் இடவசதியுண்டு எனக் கூறப்பட்டது.

## மீண்டும் ஹிந்தி திரைப்படங்கள்

(கொழும்பு)

ஹிந்தி திரைப்படங்கள் அடுத்த வருடம் முதல் மீண்டும் திரையிடப்படவிருப்பதாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு அன்ரன் விக்கிரமசிங்கா தெரிவித்தார். பொதுமக்களின் வேண்டு

[7-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

என் தேவைகளைச் சொல்லப்புகின் ஆனந்தமாகும்; ஒவ்வொரு விருப்பமும் ஒரு பொற்சுரங்கமாயினும் நான் மேலும் விரும்பியவாறுதான் இருப்பேன்.

—ஜோன் குவின்சி அடம்ஸ்

# நமது நோக்கு

## கலாதியான கன்னிப்பேச்சு

இன்றைய பட்ஜட்விவாதம் நாட்டின் பல துறைகளில் இருக்கும் இறக்க நிலை போல், காணப்படுமென்று எதிர்பார்த்ததில் ஒரு ஏமாற்றமும் இல்லை.

நாட்டின் ஆட்சிக்கு முதுகெலும்பான வரவு செலவுத் திட்டம் கடந்த காலங்களில் பல அற்புதங்களை நிகழ்த்தவில்லையாலும், விவாதமன்னர் பலர் சபையையும் நாட்டையும் தங்கள் கருத்து நிறைந்த பேச்சாலும் மதிநுட்பணிவிடையாலும் இன்பத்தில் திளைக்கவைத்தனர்

இன்றும் பழைய ஹான்சாட்டைப் புரட்டிப்பார்த்தால், டாக்டர்கள் என்.எம் பெரேரா, தகநாயக்கா, ஜீ. ஜீ. பொன்னம்பலம். பீற்றர் கெனமன், டாக்டர் கொல்வின், ஜே. ஆர்.. அதற்குமுன் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா போன்றவர்களின் பேருரைகள் 'இலக்கிய' நிலையில் வைத்துக் கணிக்கப்படும் தன்மையன.

பேச்சுக்கள், கருத்துக்கள் தான் முக்கியமென்றில்லை; நாடு அவசியமறியவேண்டிய பகிரங்க ரகசியங்கள் இத் தருணத்தில் இந்த மேடையில் வெளிவருவது நாட்டுக்கு மிக நல்லது; குறிப்பாக நாடு இன்று திண்டாடும் நிலையில் அரசியலைச் சிப்பிலியாட்டும் செய்திகள் மக்கள் உணர்விற்கு சமர்ப்பிக்கப்படுவது மகோன்னதமான சேவையென்பது எமது கருத்து.

இந்த வகையில் புதிய எதிர்க்கட்சித் தலைவர் தருணத்தைத் தப்பவிடாது பட்ஜட் விவாதம் முடிவடையும் போது நிகழ்த்திய கன்னிப்பேச்சு, ஒருகன்னித் தன்மையுள்ள இளைஞாலேயே இயலும்.

இன்றைய பட்ஜட்டை ஆராய்ந்த பல அங்கத்தவர்கள் எவராவது தாங்கள் குறிப்பிட்ட செலவுவிரையத்துக்கு மூலகாரணம்கண்டு பிடிக்கமுடியவில்லை; அல்லது முயலவில்லையெனலாம்; முயன்றாலும் முடிந்தாலும் அதனை வெளிப்படுத்தத் தயங்கியிருப்பார்களென்பதில் தடை இல்லை

எதிர்க்கட்சித்தலைவர் அனுரா பண்டாரநாயக்கா குழவிக் கூட்டுக்குக் கல்லெறிவதில் இன்பம் கண்டிருக்கலாம்; அல்லது குறிப்பிட்ட ரகசியம் அவருடைய அரசியல்வருங்காலத்திற்கு தாக்கமேற்படுத்தலாம்.

இவையெல்லாம் உண்மையென்றாலும் மக்களுக்குத் தேவையானது ரகசியம் (பகிரங்கமானாலும்) பகிரங்கப்படுத்த வேண்டியது.

நாம் வளைத்து வளைத்து எதனைச் சொல்லுகிறோமென்றால், இந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சியை உண்டுபண்ண, பல அமைச்சுக்களில் மட்டுப்படுத்தாத செலவினமே ஒரு காரணமென்றார்; அதற்கு மூலகாரணம், இன்று காலியாகவில்லாத ஜனாதிபதிப் பதவிக்கு சில அமைச்சர்கள் பந்தய ஓட்டத்தை ஆரம்பித்துவிட்டதாக திட்டவட்டமாக அனுரா கூறியிருக்கிறார்.

'கைப்புண்ணுக்கு ஏன் கண்ணாடி' என்பார்கள்; ஆனால் இந்தப் புண் நாட்டில் ஒரு புற்றுநோய்க்கு இடமளித்திருக்கிறது.

அமைச்சர்களின் இந்த அவசியமற்ற போட்டியைக் குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து அளவளாவியிருப்பதையும் வெளிவிட்டார்; அதில் ஒரு தவறும் இல்லையென்றவர், ஜனாதிபதி நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் இந்த ஆட்சிக் காலமாகிய ஆறு வருடங்களுக்கும் அசையாதிருப்பாரென்றும் நம்பிக்கை தெரிவித்தார்

பொருளாதார வீழ்ச்சிதான் இந்த 'ஜனாதிபதி பந்தய ஓட்டத்'தின் விளைவா?

கடந்த கலவரத்தில் மக்களைத் திணற வைத்த சம்பவங்களின் முரண்பாட்டை நாம் புரிந்து கொள்வது கடினமா?

சிக்கலான விடயமானாலும் அரசுக்கெதிரான அழிவுச் செயல்கள் நடைபெற்றன; அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாத நிலை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நாட்டை நிர்வகிக்கும் ஜனாதிபதியும் அமைச்சரவையும் ஒன்றுபட்டு செயற்பட்டால், இந்த நிலை ஏற்படுமா? அவ்வாறு அது ஏற்படின் ஆட்சிக்கு ஆதரவில்லை என்றும் எதிரிகளுக்கே செல்வாக்கு உண்டென்றும்கருத வேண்டும்.

ஈற்றில் அது கட்டுப்படுத்தப்பட்டமையை கூர்ந்து கவனித்தால் திட்டமிட்ட கலவரம் 'ஒரு பெரும் மர்மம்' என்று நாம் சொல்ல நேரிட்டது சரியே.

அந்த மர்மத்தை விளக்காமல் விளக்கியிருக்கிறார் திரு அனுரா பண்டாரநாயக்கா. அதற்கு நாம் அவருக்கு'சபாஷ்'சொல்கின்றோம்.

இன்று நினைவுதினம்

# வானசாஸ்திர விற்பன்னர் அலன் ஆபிரகாம்

1865—1922

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிப் புகழ் பூத்து விளங்கிய தமிழ்ப்பெரியார்களுள் பேராசிரியர் அலன் ஏபிரகாம் B. A., F.R.A.S அவர்களும் ஒருவர். கணிதம், விஞ்ஞானம், வானசாஸ்திரம், ஆகிய துறைகளில் ஆற்றல் வாய்ந்தமையோடு எழுத்தாற்றலும் நிரப்பப்பெற்ற உத்தமர் அலன் ஆபிரகாம் அவர்கள்.

திரு. எஸ். அம்பலவாணர் என்ற இயற்பெயர்கொண்ட இப்பெரியார் புகழ்பூத்தகாரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; அகில உலகும் போற்றும் வானசாஸ்திர நிபுணர் என்ற பெருமை அலன் ஆபிரகாம் என்ற பெயருக்கே உரித்தானது.

தெல்லிப்பளை போதனா பாடசாலையில் கற்கும்போது அவருடைய உடன் மாணவர் காரைநகரின் இன்னொரு தவப்புதல்வன்- இந்நாட்டில் சைவ ஆசிரியர்களைத் தோற்றுவித்த ச. அருணாசல உபாத்தியாயர்ப் பெருந்தகை என்பதும் குறிப்பிடத்தக்கது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராயிருந்து. லண்டன் இன்ரர் சயன்ஸ் (Inter Secience) வகுப்பை ஆரம்பித்து லண்டன் பட்டப் படிப்புக் கல்விக்கு வித்திட்ட பெருமை கணிதமேதை பேராசிரியர் அலன் ஆபிரகாமையே சாரும்.

தெல்லிப்பழையில் இருந்த பயிற்சிக் கல்லூரியில் கல்வி பயின்றபின் வட்டுக்கோட்டை சாஸ்திரசாலையில் கற்றுத் தேர்ந்து, கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டம்பெற்ற அவர், வட்டுக்கோட்டையில் ஆசிரியராயும், பின்னர் பேராசிரியராயும் இருந்தார். கணிதத் துறைபோன வல்லுனரான அவர்பொழுதுபோக்காக வான சாஸ்திரத்தையும் அறிந்து கிரகங்கள், நட்சத்திரங்களை ஆராய்ந்துவந்தார்.

வால்வெள்ளி என்று சொல்லுவதிலும் பார்க்க 'தூமகேது' என்பது சிறந்த சொல். தூம-புகை; கேது-நட்சத்திரம். எழுபத்தாறு வருடங்களுக்கு ஒருமுறை இந்த Halley தூமகேது தோன்றுமென்று ஆராய்ச்சி செய்து நிரூபித்தார்; அந்தக் கணக்கின்படி அடுத்து இது தோன்றுவது 1986ம் ஆண்டாகும். கடந்த காலத்தில் 1531, 1607, 1682, 1759, 1835, 1910 ஆண்டுகளில் இது தோன்றியது. அது தோன்றியிருக்கும்போது அவர் எழுதிய கட்டுரையில் அதால் ஒரு தீங்கும் ஏற்படாதென்று நம்பிக்கை தெரிவித்தார்.

அக்காலத்தில் 1910ம் ஆண்டளவில் விண்வெளியில் பெரிய பரபப்பைஉண்டாக்கிய ஹாலி வால்வெள்ளியைப்பற்றி உலக விஞ்ஞானிகள் கருத்துத்தெரிவித்தார்கள்

வால்வெள்ளிகள் வழக்கமாக கோடிக்கணக்கான மைல்கள் நீளமுள்ள வால் அல்லது வால்கள் உள்ளன அவற்றின் வால்கள் விண்வெளியில் உள்ள பல கிரகங்களின் இடத்தை அளந்து அப்பாலுக்கப்பாலும் நிலவுந் தன்மையுள்ளவை. பழைய காலத்துமக்கள் வால்வெள்ளி தோன்றினால் நாட்டின் பெரியவர் மறைவர் என்றும் கருதினர்.

ஹாலி வால்வெள்ளியை முதலில் ஆராய்ந்தவர் எட்மன் ஹாலி (1656 — 1742) என்பவராவர். எனவேதான் அதற்கு அவரின் பெயர் சூட்டப்பெற்றது. அற்புதமான ஹாலி வால்வெள்ளி தோன்றும் காலத்தை மேற்குத்தேய விஞ்ஞானிகள் தங்கள் உபகரணங்களைக் கொண்டு வெகு நுட்பமாகக் கணித்து அது இன்ன நாள்களில் இவ்வண்ணம் தோன்றும் என்று வெளியிட்டனர்.

ஆனால் அலன் ஆபிரகாம் அவர்கள் தம் சொந்தத் தயாரிப்பான மட்டைகள் கோடுகள் கொண்டு அது இன்ன நாளில் இவ்வண்ணம் தோன்றும்என்று வெளியிட்டார்.

எல்லோரும் எதிர்பார்த்த வண்ணம் வால்வெள்ளி தோன்றிற்று. ஆனால் அலன் கணித்த நாளிலே அவர் கணித்த வண்ணமே அது தோன்றி நிலவியது. இதனை அறிந்த மேற்கு நாட்டவர் கிழக்குத்தேயக் கணித மேதையை மெச்சினார்கள் வியந்தார்கள் போற்றினார்கள்.

இதுகாறும் தேயிலைக்கும் இறப்பருக்கும் தேங்காய்க்கும் புகழ்பெற்ற இலங்கை வான மண்டலத்தையும் அளக்கக் கூடிய பெருமையுடையதை அறிந்தார்கள். அன்புமீதூர அவருக்கு ஆசிகள்கூறி அவரை இராசாங்க வானசாஸ்திர மன்றத்து கௌரவ அங்கத்தவராகப்பதிந்து மதித்தார்கள் இலங்கையில் முதல்முதலாக F. R. A. S பட்டம்பெற்ற பெருமகனார் காரைநகருக்குரிய ஆபிரகாம் அவர்களாவர்.

ஆபிரகாம் அவர்கள் தமிழிலும் பாண்டித்தியம்பெற்று பாவலராய் விளங்கினார்.

உதயதாரகையின் ஆசிரியராகவும், சமூகப்பணியில் சிறந்தவராகவும், அன்பு பொறுமை அடக்கம், இரக்கம் ஆகிய அருங்குணங்கள் வாய்க்கப்பெற்ற பண்பாளன் என்று உலகமே என்றும் போற்றுந்தகைமையராய்த் திகழ்ந்தார்

நன்றி 'மில்க்வைற்செய்தி' ஆசிரியத் தலையங்கம்

## அந்தக் குரல் ஓய்ந்தது!

"வணக்கம் கூறி விடைபெற்றுக் கொள்ளுவது மயில்வாகனன்'' என ஒரு காலத்தில் நாள்தோறும் சொல்லிவிட்டே விடைபெற்ற அந்த மனிதர் 'திடுதிப்'பென எம்மிடம் சொல்லாமல் கொள்ளாமலேயே- அதுவும் தொலைதூர நாடொன்றில்- சென்றுவிட்டார்!

மயில்வாகனன் போய்விட்டார் என்றதும் இரவு நேரத்தில் திடீரென மின்சாரம் நின்றது போன்ற ஒரு அதிர்ச்சி.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்புச் சேவை பிரபலமடையக் காரணமாயிருந்த முன்னோடிகளில் முதல்வரான திரு. மயில்வாகனன் தமிழ் நாட்டு வானொலி நேயர்கள் மத்தியில் பெரும் புகழையும், பிரக்யாதியையும் சம்பாதித்துக் கொண்டவர்.

'நம்ம மயில்வாகனன்' என்று வாத்ஸல்யத்துடன் அவர்கள் கூறிமகிழும் அளவுக்கு அவருக்கு அங்கு ராஜ மரியாதை.

ஒரு திரைப்படத்தில் விண்ணுலகம் செல்லும் 'டணால்' தங்கவேலு வானொலிப் பெட்டியையும் எடுத்துச் செல்கிறார் அவ்வேளையில், அவர் வானொலியை முடுக்கிய போது மயில்வாகனின் குரல் ஒலிக்கிறது. 'அட, இங்கு வந்தாலும் நம்ம மயில்வாகனன் விடமாட்டார் போலிருக்கே' என்று தங்கவேலு தமாஷாகச் சொல்லுகிறார். வாஸ்தவத்தில் அது தமாஷ் அல்ல, அந்தளவுக்கு தமிழர் இதயங்களில் நீக்கமற நிறைந்த ஒரு மனிதர் மயில்வாகனன்

முன்னொரு தருணம் யாழ். முற்றவெளி அரங்கில் சிம்மக் குரலோன் சிவாஜி கணேசனை செந்தமிழ்க் குரலோன் மயில்வாகனன் பேட்டி கண்ட வேளையில், ''சிவாஜி என்ற பெயர் உங்கள் பெயருருடன் எப்படி ஒட்டிக் கொண்டது?'' எனக்கேட்டார். அதற்கு சிவாஜிதந்த பதில்; ''அதில் நிறைய பசை இருக்கிறது!'' பசையுள்ள இந்தப் பதில் கேட்டு மயில்வாகனன் அந்த மேடையில் நின்று சிரித்த அந்த மந்த ஹாஸமிக்க சிரிப்பு— அது இன்றும் காதுகளில் ரீங்காரிக்கிறது.

மயில்வாகனன் சிறப்புப் பற்றி நாம அதிகம் பேசுவது கொல்லர்சாலையில் ஊசி விற்பதனை ஒத்தது. என்றாலும் அந்த மனிதனைப் பற்றிப் பேசாதிருக்க முடியவில்லையே!

நேற்று முன்தினம் இலங்கை வானொலி ராதா ஜெயலக்ஷ்மியின் அருமையான பாடலொன்றைப் பொருத்தமாக ஒலிபரப்பியது!

(5-ம் பக்கம் பார்க்க)

'தமிழர் பிரச்னை தொடர்பான

# சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வோம்''

- பீட்டர் கெனமன்

(யாழ்ப்பாணம்)

''ஜனாதிபதி, தமிழர்பிரச்னை தொடர்பாகசர்வகட்சிமாநாட்டைக்கூட்டி, எங்களுக்கு அழைப்பு விடுத்தால் அதில் கலந்துகொள்வோம்'' என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பீட்டர் கெனமன் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

யாழ். கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்தில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:

''சர்வகட்சி மாநாடு முன்பு கூட்டப்பட்டபோது நாங்கள் செல்லவில்லை தமிழர் விடுதலை கூட்டணியினர் செல்லவில்லை. அமைச்சர் தொண்டமான் கூடச் செல்லவில்லை. அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளான நவ லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவைக்குதடை இருந்தது. சுதந்திரக் கட்சி, சமசமாஜக்கட்சிகள்கூடச்செல்லவில்லை. இதனை வட்ட மேசை மாநாடென்று சொல்லமுடியாது.

''தமிழர் பிரச்னை தொடர்பாக, இனிமேல் சர்வகட்சி மாநாட்டிற்கு அழைப்பு வந்தால் செல்வீர்களா? என்று கேட்டபோது நாங்கள் போவோம்'' என்றார்.

''தற்பொழுதுள்ள நிலையில், பாராளுமன்ற உப தேர்தல் நடத்துவது உசிதமல்ல. அவசரகாலச் சட்டத்தை நீடித்து வைத்துக்கொண்டு அங்கீகரிக்

(5ம் பக்கம் பார்க்க)

# 'பெருமளவு தமிழ் அரச ஊழியர்கள் தென்பகுதிக்கு திரும்பிச் செல்லவில்லை''

## இந்தியப் பத்திரிகைக்கு 'அமிர்' பேட்டி

(புதுடில்லி)

தென்பகுதி பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற தமிழ் மாணவரில் ஒருவராவது அங்குதிரும்பிச் செல்லவில்லை பெருமளவிலான அரசாங்க ஊழியர்கள் இன்னும் தெற்கிற்கு திரும்பிச் செல்லவில்லை தெற்கில், தமிழரினால் நடத்தப்பட்ட உணவுச் சாலைகளும் திறக்கப்படவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு ஏ. அமிர்தலிங்கம், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அப்பேட்டியில் மேலும் கூறியதாவது:

' எமது இரண்டுஅடிப்படை உரிமைகள் தொடர்பாக நாம் இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் திரு ஜி பார்த்தசாரதியிடம் வலியுறுத்தியுள்ளோம். அவையாவன ஒன்று இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு வேண்டும்.

''இரண்டாவது தமிழ்ப் பகுதிகளின் பிரதேச ஒருமைப்பாடு நிலைநாட்டப் படவேண்டும். பிரதேச சுயாட்சி வழங்கப்படவேண்டும்.

''எங்கள் பிரதேசங்களில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் அதிகாரம் எங்கள் கைகளில் இருக்க வேண்டும்'' என்றார். (க-வெ)

## அகதிகளுக்கு உடுபுடவைகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிகளுக்கு எதிர்வரும் முதலாந் திகதி இலங்கைசெஞ்சிலுவைச்சங்கம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து உடு புடவைகளை வழங்கவுள்ளது.

முன்பு உடு புடவைகள்கிடைக்காத அகதிகளுக்கே இவை வழங்கப்படவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு கே கிட்ணர் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்தே இந்த உடுபுடவைகள் வழங்கப்படவுள்ளது.

விவசாயபீட முதலாண்டுப் பரீட்சை:

# தமிழ் மாணவர்கள் பகிஷ்கரிக்க முடிவு!

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள தென்பகுதிப் பல்கலைக் கழகங்களின் விவசாய பீட மாணவர்கள் இந்த ஆண்டில் நடைபெறவுள்ள முதலாமாண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் நிலைமையைப் பொறுத்து இப்பரீட்சைக்கு அடுத்த கல்வியாண்டில் தோற்றுவது குறித்து பின்னர்முடிவெடுப்பது என்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

விவசாயபீட முதலாம் வருட மாணவர் அவைத் தலைவர், விவசாய பீடத் தலைவரின் கோரிக்கைக் கிணங்க தென்பகுதி பல்கலைக்கழகங்களைப் பகிஷ்கரித்துவரும் விவசாய பீட தமிழ் மாணவர்களுக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார் அக்கடிதத்தில் டிசம்பர்மாத முதல்பகுதியில் நடைபெறவுள்ள முதலாண்டு பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாகக் கேட்கப்பட்டிருந்தது, இது குறித்தே இந்த மாணவர்கள் கூடி மேற்கண்ட முடிவை எடுத்தனர் (கி-கு)


# மேர்ச்சன்ட் பினன்ஸ்

## லிமிட்டெட்

(அங்கீகரிக்கப்பட்ட கிறெடிற் ஏஜென்சி)

4, 1-ம் மாடி, நவீன சந்தைக் கட்டிடம், யாழ்ப்பாணம்.

கூட்டிணைக்கப்பட்ட தேதி : 2 - 05 - 1979

## நிலையான வைப்புத் திட்டங்கள்

| காலம் | வருட வட்டி விகிதம் | |
|---|---|---|
| | மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
| 7 மாத வைப்பு | | 15% |
| 9 மாத வைப்பு | | 16% |
| 1 வருட வைப்பு | 18% | 20% |
| 2 வருட வைப்பு | 18% | 22% |

## பிரதான தொழில் வகைகள்

- வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல்.
- வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்கு செய்தல்.
- வர்த்தக வாகனங்கள் (லொறி), உழவு யந்திரங்கள் (ட்ராக்டர்), மினி பஸ் முதலியனவற்றிற்கு வாடகைக் கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல்.
- இடைக்கால கடன் கொடுத்தல்.
- காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்.

நிதி நிலைமை

| | 31-3-81 ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-82 ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-83 ல் முடிந்த வருடத்திற்கு ★ |
|---|---|---|---|
| | ரூ,000 | ரூ,000 | ரூ,000 |
| பங்கு மூலதனம் ... | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | 300, | 560, |
| நிலையான கடன் முறிகள் ... | 585, | 597, | 597, |
| வைப்புக்கள் ... | 3,444, | 6,615, | 10,157, |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்கு முன் லாபம் ... | 193, | 191, | 644, |
| வரிக்கு பின் லாபம் ... | 193, | 191, | 324, |
| வழங்கப்பட்ட பங்கு லாப வீதம் ... | 25% | 30% | — |
| வழங்கப்படவிருக்கும் பங்கு லாப வீதம் ... | — | — | 30% |

★ இவ்வாண்டிற்குரிய கணக்கு எண்பார்வை செய்யப்படுகிறது.

இயக்குனர் சபை

டாக்டர் யோகு பசுபதி M. B. B. S. (Cey ), D. C. H. (Lond.), M R. C. P. (Lond.) தலைவர்
A. சோமசுந்தரம்பிள்ளை B. A., F. C. A. முகாமைத்துவ இயக்குனர்
K. லோகநாதன் B. S. B. A, (U. S. A) இயக்குனர் - ஆலோசகர்
S. தனபாலசிங்கம் B. Sc (Cey.) இயக்குனர் - முகாமையாளர்
S. மகேந்திரன் B. Sc. (Cey.) இயக்குனர் - கடன் வசதிகள்
K. நடராசா B. Sc. Bar - at - Law, Attorney - at - Law
N. சிவசிதம்பரம் Retd. S. L. A. S.
V. கார்த்திகேசு B. Sc. A. M. B. M. I. M. A, M. I, Prod. E.

தொலைபேசி: 24183)


# "நாவலர் நூல் வெளியீடு காலம் போற்றும் தொண்டு''

## — பண்டிதமணி

நல்லை நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழாவில் இடம் பெற்ற பண்டிதமணி, இலக்கியக் கலாநிதி சி. கணபதிப்பிள்ளையின் செய்தி.

நாவலர் பெருமான். பெரிய புராணம் பற்றிக்குறிப்பிடுகையில் 'திருத்தொண்டர் பெரியபுராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்திபெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத்திறத்தை விளக்குவதாகிய சரித்திர ரூபமாம் இருக்கும்'' என்கின்றார்.

நாவலர் பெருமானாற் செய்யப்பட்ட திருத்தொண்டர் பெரியபுராண வசனத்தைச் சமீபத்தில் வெளியிட்டுவைத்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தாரின் தொண்டு மிகவும் பாராட்டக்கூடியது

காலத்தின் தேவையையுணர்ந்து, 'இலக்கண வினாவிடை என்னும் அரிய நூலை அச்சிட்டு வெளியிட முன்வந்துள்ள வண்ணை. சாந்தையர் மடம் விநாயகர் ஆலய பிரார்த்தனைச் சபையினரின் நற்சேவை மிகவும் நன்றிக்குரியது.

கந்தபுராண உதிரத்தில் உதித்தவர் நாவலர்பெருமான். கந்தபுராணத்தில் அவருக்கிருந்த ஆராமையைக் கந்த புராண வசனத்தின்மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். அத்துணைச் சிறப்புவாய்ந்த 'கந்தபுராண வசனம்' என்னும் நூலின் பிரதி பெறமுடியாதிருந்த காலகட்டத்தில் நாவலர் சபையினர் முன்வந்து கந்தபுராண வசனத்தை மறு பிரசுரஞ் செய்ய உழைத்த உழைப்பு மகத்தானது.

இம்முயற்சிக்கு அயராது உழைத்தவர்கள் பலரேயாயினும், பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் ஒருவர் நாவலர் சபையின் பொதுச் செயலானராயிருந்து அயராது பணியாற்றிய அமரர் மயில்வாகனம் ஸ்ரீகாந்தா அவர்கள் மற்றவர். நாவலர் சபையின் தோற்றத்திற்குக் காரணமாயிருந்த அமரர் க. இளையதம்பி அவர்கள்.

நாவலர் சபையின் முக்கியஸ்தர்களான இவர்கள் இருவரும் ஒருவர் பின் ஒருவராக அமரத்துவம் எய்தியமை நாவலர் சபைக்கு பேரிழப்பாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்னை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட இரு இடதுசாரி அரசியல் கட்சிகளுக்குத் தடைவிதித்துள்ள நிலையில் உப தேர்தலை நடத்துவது உசிதமல்ல

### காலி இடங்கள் அதிகம்

''கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் மூலம் வடக்கு, கிழக்கில் காலியாகவுள்ள இடங்களைநிரப்பவாய்ப்புண்டு. வடக்கில் பாதிக்கப்பட்டு வந்துள்ள ஆசிரியர்களிலும் பார்க்க காலி இடங்கள் கூடுதலாக இருக்கின்றன பாதிக்கப்பட்டுவந்த அகதிகள் மாணவர்களை அனுமதித்ததன்மூலம் யாழ்ப்பாணப் பாடசாலைகள் முன்மாதிரியாக நடந்துள்ளன. இதேவிதத்தில், அரசாங்கமும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விஷயத்தில் நடந்து கொள்ளவேண்டும்:

''எல்லாம் வழமைக்கு திரும்பிவிட்டது, நிலைமை சீராகிவிட்டதென்று கூறிக்கொண்டு, பாதிக்கப்பட்டு வந்த அரசாங்க ஊழியரையும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பழைய இடங்களுக்குத் திருப்புமாறு உத்தரவிடுவது அரசுக்கு ஏற்றதல்ல.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் ஒன்றவிட்ட ஒருநாளைக்கு அதுவும்ஒரு பெட்டி நிறைய ஆயுதப்படையினரின் பாதுகாப்புடன் ஒரே ஒரு ரயில் சேவைக்கு விடும்போது, வழமையான நிலைமை திரும்பிவிட்டதென்று எப்படிக் கூறமுடியும்?'' என்றார்.

திரு பீட்டர் கெனமன் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அகதிகள் ஆகியோரையும் சந்தித்து அவர்கள் நிலைமை பற்றிப்பேசினார்.

நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கத்தினர், யாழ் பிரஜைகள் குழுவினர் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளும், சந்தித்துப் பேசினார்கள்.

(க)

## அந்தக்குரல்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அது இது:

''மனமே முருகனின்
மயில்வாகனம்—என்
மாந்தளிர் மேனியே
குகனுலயம்—என்
குரலே செந்தூரின்
கேந்வில் மணி—அது
குகனே சண்முகனே என
ஒலிக்கும் இனி!''

கோவில் மணியாய் கணீர் கணீரென எமது காதுகளில் தேன்பாய்ச்சிய அந்த மயில் வாகனின் நினைவு எம் மன வாகனத்தில் என்றும் வீற்றிருக்கும்!

—கணேஷ்

# இன்றைய பலன்

**கார்த்திகை 13-ந் திகதி**
**செவ்வாய்க்கிழமை**
**(29-11-83)**

மேடம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளைய லாம் மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும் அரசியல் வாதிகளுடன் மிகவும் அவதானமாக நடந்து கொள் ளவும்.

இடபம்: குடும்ப வாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும் தூரத்து உறவினர் ஒருவர் உங் களுடன் ஒத்துழைப்பதற்கு முன் வருவார்கள் டாக்டர்க ளுக்கு சிறப்பான தினம்.

மிதுனம்: வெற்றிப் பாதை யில் வீறுநடை போடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற் சாகம் பிறக்கும் எதிரிகள் மதி தியில் ஏற்பட்ட மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க் கும்.

கடகம்: கூட்டு வியாபாரத் தில் முன்னேற்றம் உண்டு வெளியூரிலிருந்து திருப்திகர மான செய்தி கிடைக்கும் கட மையில் ஆர்வம் பிறக்கும் உதி தியோக உயர்வும் உண்டு.

சிங்கம்: ஏமாற்றம் தாக்கும் பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றும் தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் தோன் றும் சிறுபிணிக்கும் இடமுண்டு பொறுமையுடன் இருப்பின் வெற்றி உண்டு.

கன்னி: முன்னேற்றப்பாதை யில் தடைகள் பலதாக்கும் இருள்படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்குவந்து வேத னையைத் தரலாம் மின்சாரப் பகுதியில் கடமை புரிவோர் ஜாக்கிரதையுடன் இருக்கவும்.

துலாம்: எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும் நண்பர்களின் ஒத்துழைப்புடன் பெரியோரின் ஆசியுண்டு சொத்து விவகாரத் தில் நல்ல முடிவு ஏற்படும்.

விருச்சிகம்: அலைமோதும் எண்ணங்கள் உங்கள் அமை திக்கு பங்கம் ஏற்படுத்தும் அன்னியர்களின் வேண்டாத தலையீடு பொறுமையைச் சோதிக்கும் இரவுப் பயணத் தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

தனு: கலைஉலகம் சம்பந்தப் பட்டவர்களுக்கு புகழ் பரவும் சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவ னம் செலுத்தவும் துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள்வாழ்க் கையைச் சோபிதமடையச் செய்யும்.

மகரம்: புத்திர வழியால் புகழ்வந்து சேரும் வெளியூர்ப் பயணமும் உண்டு குடும்பத் தில் சுமுகமான நிலைதென் படும் புதிய தொடர்புகளால் வெற்றியுண்டு அதன்வழி முன் னேற்றமும் மகிழ்ச்சியும் தென் படும்.

கும்பம்: திடீர்த் தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கும் நினைப்பது ஒன்று நடப்பது வேறு ஒன்றாக அமையும் இருப் பிட மாற்றம் வேதனையைத் தரலாம் சில உறவு முறையில் பிரிவுக்கும் இடமுண்டு;

மீனம்: அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்டதேவதை யின் பார்வைக்கும் இடமுண்டு சகோதரம் ஒன்றுக்கு திடீர்த் திருமணம் நடைபெறலாம்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

# "ஓமந்தை அகதிகளுக்கு உதவ ஒருநாள் சம்பளத்தை வழங்கவும்"

## வவனியா ஆசிரியர்களிடம் கோரிக்கை

(வவனியா)

அண்மையில் நடந்த கலவ ரத்தினால் பாதிக்கப்பட்டு வவ னியா ஓமந்தை அகதி முகா மில் தங்கியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வவ னியா மாவட்ட ஆசிரியர்கள் தமது ஒரு நாள் ஊதியத்தை வழங்க முன்வர வேண்டுமென வவனியா தமிழர் ஆசிரியர் சங்கக் கிளையின் தலைவர் திரு. கே சிவஞானம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் சங் கப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது தலைமையுரை நிகழ்த் திய போது அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். வவனியா மாவட்டக் கல்வி அதிகாரி திரு. பி. சோமசுந் தரம், மாவட்டச்செயலாளர் திரு மு. கார்த்திகேசன் ஆகி யோரும் பேசினார்கள்.

நடப்பு வருட உத்தியோகஸ் தர்களாக பின்வருவோர் தெரி வாகினர்.

தலைவர்: திரு. க. சந்திரசேக ரம்பிள்ளை. செயலாளர்: திரு க. சிவஞானம். உபசெயலா ளர்: திரு எஸ். பொன்னம்பலம் தனாதிகாரி: திருமதி எஸ். தர்ம தேவன். ஏழுபேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப் பட்டது. (கு)

# ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 'லஸி' - நாயொன்றின் தீரச் செயல்கள்
6-30 'கலை அரங்கம்'
7-00 செய்திகள் (தமிழ்)
7-1[illegible] நாளைய நிகழ்ச்சிகள்
7-15 டென்னிஸ் விளையாட் டுப் பயிற்சி
7-30 தகவல் நிகழ்ச்சி (சிங்க ளம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 குறுந்திரைப்படம் (சிங் களம்)
9-00 வெளிநாட்டுச் செய்தி விமர்சனம்
9-15 ஆங்கில இசை அறிஞர் மேலிஸ் வோக்கருடன் பேட்டி
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ஹவாய்-5 ஓ' துப்பறி யும் தொடர் சித்திரம்
10 40 நிகழ்ச்சிகள் முடிவு.

# ரூபவாஹினியில் 'தாமரை நெஞ்சம்'

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட் சியில் நாளைபுதன்கிழமை இரவு 'தாமரைநெஞ்சம்' என்ற தமிழ்த் திரைப்படம் ஒளிபரப் பப்படவுள்ளது. (வெ)




**அங்கும்... இங்கும்... எங்கும்...**



**சிங்கர**

**சவாரிக்குச் சிறந்ததோர் பைசிக்கிள் சிங்கர்**

உங்கள் பிரயாணம் எதுவாக இருந்தாலும் உற்ற வொரு நண்பன்.
நீடித்த பாவனையும் தரமும் கொண்ட சிங்கர் பைசிக்கிள்.
கரடு முரடான பாதையா கல்லும் குழியும் நிறைந்த தெருவா,
சதுப்பு நிலமா, வைரமே உருவான வீதியா உறுதியான
உதிரிப்பாகங்கள் கொண்ட சிங்கர் பைசிக்கிள் ஒய்யாரமாகவே ஓடும்.
விலை ரூபா - 1390/- (வரிகள் தனி)
சிங்கர் இலகு தவணைக் கட்டணமுறை, வாங்குவதற்கு ஒரு சிறந்த வழி.

SINGER BICYCLES

**சிங்கர் (ஸ்ரீ லங்கா) லிமிட்டெட்.**

* Registered Trade Mark of the SINGER Company

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15, 4-15, 7-15
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும்பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
மாதர் கூட்டம் திரளும்
3-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி—சரிதா
கீழ்வானம் சிவக்கும்
(ஈஸ்மன் கலர்)
Next
THE FINAL CONFLICT

றீகல் (யாழ்நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-00
ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா
சுமன், சௌகார் நடிக்கும்
தீ
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்ட
புத்தம்புதிய வண்ணப்பிரதி

வெகு விரைவில்
பயணங்கள்
முடிவதில்லை

இன்று மட்டும்
Rajah JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
The Fighters
(Color) (Adults only)
30-11-83 முதல்
BATTLE CREEK
BRAWL
கராட்டி படம்

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
நாதனி, கருவிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

லிடோ (யாழ். நகர்)
தினசரி
நீர்க்குமிழி
வருகிறது
நீதிபதி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சுபதினம்
வெகுவிரைவில்
கார்த்திக் நடித்த
காற்றினிலே வரும்
கீதம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
பாலாஜி
என் கடமை
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்-ஜி-ஆர், சரோஜாதேவி
நடித்த தேவரின்
தாயைக்காத்த
தனயன்
(புதிய பிரதி)
30-11-83 முதல்
Burt Reynold in
ROUGH CUT
விரைவில்!
ஆனந்த ராகம்

பூம்புகார் கொலை வழக்கு:

# "ஆஸ்பத்திரியில் என்னை டாக்டர்கள் பார்க்கவில்லை"

## காயமடைந்தவர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

என்னை ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பார்க்கவில்லை. 4 நாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அந்த 4 நாட்களிலும் ஒரு டாக்டரும் வந்து பார்க்கவில்லை. எனக்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டதென்று டாக்டரிடம் கூறவில்லை''

பூம்புகார் கொலைவழக்கில் காயக்காரர்களில் ஒருவரான சவரிமுத்து யேசு, எதிரிகளின் சட்டத்தரணி ஆர். ரி. சபாரட்டிணத்தினல் குறுக்கு விசாரணை செய்தபோது மேற்கண்டவாறு கூறினர். இவ் வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கில் பூம்புகாரைச் சேர்ந்த ம. தியாகராஜா, ஐ. இரத்தினம், பொ. மகேந்திரன் அல்லது கட்டைச்சி, பொ, குலேந்திரன் அல்லது செல்வம், ப. துரைசிங்கம் அல்லது செட்டி. ம. விஜயகுமார் அல்லது விஜயன், மா. மாகேந்திரராஜா அல்லது பவி ஆகியோர் 82 மார்ச் 29 ல் பூம்புகார், அரியாலையில் பொல்லு, வாள், இரும்புக்கம்பியுடன் சட்டவிரோதகக் கூடினர்கள் என்றும் சவரிமுத்து மோசஸ் என்பவரை கொலை செய்தார்கள் என்றும், சி. திருநாவுக்கரசு என்பவரின் கடையை உடைத்து 5000 ரூபா சேதம் விளைவித்தார்கள், என்றும், 4ம் 7ம எதிரிகள் த. சுகுமாரனுக்கு படுகாயம் விளைவித்தார்கள் என்றும், 1ம், 6ம், 7ம் எதிரிகள் ச யேசுவுக்கு சிறுகாயம் விளைவித்தார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் யாழ். பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி எம். சபாநாதன் ஆஜரானர். 1ம், 2ம், 3ம், 5ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம், சட்டத்தரணி ரி. லிங்கராஜாவின் அனுசரணையுடன் ஆஜரானர். 4ம், 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி லிங்சராஜா ஆஜரானர்.

சாட்சியமளித்த யேசு சட்டத்தரணி சபாரட்ணத்தின் குறுக்கு விசாரணையின் போது மேலும் கூறியதாவது: ''எனக்கு எல்லாமாக 7, 8 வெட்டுக்காயங்கள், தலையில் எனக்கு 7 காயங்கள், இறந்த மோசஸ் எனது தமயன், மோசஸுக்கு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. மோசஸுக்

(8-ம் பக்கம் பார்க்க)

### மீண்டும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கோளைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

தற்போது வருடம் சுமார் 200 தமிழ் ஆங்கிலப் படங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. (க)

## 1984ம் ஆண்டிற்கான "பொருட்களையும், சேவைகளையும் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

கீழ்க்காணும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்குக் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையுடன் தங்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்திலுள்ள உற்பத்தியாளர்கள், ஏஜண்டுகள், விநியோகஸ்தர்களிடமிருந்து 1984-ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1 அ. துணி வகைகள், ஆ. தோல் சாமான்கள்,
இ. வீட்டுப் பொருட்கள், ஈ. சமையல் உபகரணங்களும் இதற்கான வெட்டுக் கருவிகளும்,
உ. சவர்க்காரம், ஊ. நல்லெண்ணெய்.
2 அ. சுத்திகரிப்பு உபகரணங்கள்
ஆ. முதல் உதவி உபகரணங்களும், மருந்து வகைகளும்
3. அ. பெயிண்டுகளும், பெயின்ற் வகைகளும்
ஆ. தூசு, வர்ணம் பூசும் கருவி (Brush)
இ. சீல் குத்தும் கூட்டுப் பொருள்
ஈ. நெருப்பு களிமண் (Fire Clay)
4. அ. கட்டிடப் பொருட்கள், சறளைக் கற்கள், ஆற்று மண், சிறு மண், நாகர் கோவில் மண் உட்பட
ஆ. வேலியடைக்கும் பொருட்கள்
இ. சுகாதார உபகரணங்கள்
ஈ. கூரைப் பொருட்கள்
உ. மரம் (காயா தடி, பனை மரம், சிலாகை, பலகை ஆகியன)
ஊ. குழாயும், குழாய்ப் பொருத்துகளும்
5. அ. போல்ட், நட், வாஷர், றிவேட், ஆணி வகைகள்
ஆ. பலப்படுத்தும் சாமான் (இரும்பு வகைகள் Reinforcements)
இ. தகடுகள்
ஈ. கட்டிட அமைப்புப் பொருட்கள் (H இரும்பு ஆங்கிள் இரும்பு)
6. அ. மின்சார உபகரணங்கள்
ஆ. மின்சாரக் கருவிகள் (குளிர் சாதனப் பெட்டி, விசிறி, குளிர்மையூட்டிகள்)
இ. மின் தடைப் பொருள்
ஈ. மின்சாரக் கம்பியும் வயரும்
உ. பல்புகள்
7. அ. ரயர், ரியூப்
8. அ. உலோகச் சாமான்கள்
ஆ. உலோக ஒட்டுச் சாமான்கள்
இ. செம்பு, பித்தளைக் கம்பி
ஈ. உலோக வெட்டுச் சாமான்கள்
உ. பட்டடைப் பொருட்கள் (Wokrshop Tools)
9. அ. எழுது கருவி வகைகள், ஆ. கந்தோர் உபகரணங்கள், இ. தளபாடங்கள்
10. அ. இரசாயன, ஆய்வுகூடக் கருவிகள்
11. அ. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள்
ஆ. சைக்கிள் உதிரிப் பாகங்கள்
இ. மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் உதிரிப்பாகங்கள்
12 அ. கயிறு, நூல் வகைகள்
ஆ. தும்புத் தடிகள், ஈர்க்குக் கட்டுகள், நார்க் கடகங்கள்

**சேவைகள்:**

1. அச்சடித்தல்
2. டெயிலரிங் (பில்ர ரியூப் (Filter Tube) தைத்தல் உட்பட)
3. தட்டச்சு இயந்திரம், றேனியோ இயந்திரம், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவை பழுது பார்த்தல், சேர்விஸ் பண்ணுதல்
4. மோட்டார் வாகனத்தின் சீற், கூடாரம் தைத்தல்
5. லொறி, உழவு இயந்திர (Tractor, Tipper) மூலப் பொருட்கள் ஏற்றி இறக்குதல் (Transport)
6. புளொக், றப்பர் முத்திரை, பிளாஸ்டிக் / பித்தளை வட்டங்கள்
7. பியூல் இன்ஜெக்ரேஸ் பழுதுபார்த்தல் (Repairs to fuel injectors)
8. மரம் - கையால் அரிதல், இயந்திர மூலம் அரிதல்
9. பனைமரம் தறித்து, பிளந்து சிலாகையாகவும், மரமாகவும் சீவுதல்

பதிவுசெய்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விபரங்கள் அடங்கிய மனுக்கள்மூலம் விண்ணப்பம்செய்தல் வேண்டும்

அ. விண்ணப்பதாரரின் பெயர், பதிவுசெய்யப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம்
ஆ. வழங்கக்கூடிய பொருட்களும், சேவைகளும்
இ. வியாபாரத்தில் தகைமை (தனி உரிமையாளர், பங்குதாரர் அல்லது கம்பெனி)
ஈ. வியாபாரப் பதிவு இலக்கம்
உ. வங்கியின் பெயர், வங்கிக் கணக்கின் இலக்கம்
ஊ. பொருட்களை / சேவைகளை கடனுக்கு விநியோகிக்க முடியுமா?

ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கும் / சேவைகளுக்கும் பதிவுசெய்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும். கூட்டாக அனுப்ப விரும்பினல் கீழ்க் குறிப்பிட்ட முறையைப் பின்பற்றி ஒரே தபால் உறையில் அனுப்புவதும் ஏற்றுக் கொள்ளப்படும்.

வழக்கமாய் மதிப்புக் குறிப்பீடு (Quatation) பதிவு செய்யப்பட்ட வழக்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆனல் தெரிவுசெய்யப்பட்ட வழக்குநர்களிடமிருந்தோ அல்லது மற்றும் பதிவுசெய்யப்படாத வழக்குநர்களிடமிருந்தும் மதிப்புக்குறிப்பீடு கோரும் உரிமை இந்த ஸ்தாபனத்திற்கு உண்டு.

வழங்குநர்களும் / சேவையாளர்களும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மதிப்புக்குறிப்பிட்டு வழங்கத்தவறின் அல்லது மதிப்பீட்டின்படி வழங்கல்கள் / சேவைகள் வழங்கத்தவறின் அல்லது பொருட்களின் குறிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு அமையவழங்கத்தவறின் அறிவித்தலின்றி வழங்குநர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இந்த நிறுவனம் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைக் காரணம் காட்டாமல் ஏற்கவோ அல்லது நிராகரிப்பதற்கோ உரிமையுண்டு. பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 'வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1984' எனத் தெளிவாகத் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவருக்கு 1983 டிசம்பர் 10-ம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும்.

**விநியோக உத்தியோகத்தர்**
காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை. 10097

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சோமசுந்தரம் பத்மநாதன்

நான் அதிகாலை கண் விழித்ததும் உமது நினைவே என்னைவதைக்கிறது. என்னை அறியாமல் கண்களால் நீர் சொரிகின்றது. இல்லத்தில் காண்பதெல்லாம் உமது கைவண்ணம். பூஞ்சோலையைக் காண உமது நினைவால் நெஞ்சு பதறுகிறது. உமது ஆத்மா சாந்தி அடைய காலை, மாலை இறைவனை பிரார்த்திக்கின்றேன். உமது நினைவால் வாடும்,

அன்பு மம்மி, சகோதரர்கள், சகோதரிகள், அண்ணி, மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், சகோதர சகோதரி பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.

"வசந்தம்",
யாழ். வீதி,
சாவகச்சேரி.

10197

### பொலிஸ் காவலில் இளைஞர்:

# பிராந்திய பொலிஸ் அதிபர் உத்தரவு சமர்ப்பிப்பு!

(மாவிட்டபுரம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒருமாதகாலமாக தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான விசாரணையில் பிராந்திய பொலிஸ் அதிபர் வழங்கிய உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டது.

சுன்னாகத்தை சேர்ந்த சிறிதரன் அரியரத்தினம் என்ற இளைஞர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒரு மாதத்துக்கு மேல் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி அவரின் தாயார் தவமணி அரியரத்தினம் சட்டத்தரணி ஆர் ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு சம்பந்தமாக விசாரணை செய்த மல்லாகம் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவரை தடுத்து வைப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உத்தரவை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டிருந்தார் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி சார்பில் ஆஜரான சார்ஜன்ட் சிவலிங்கம் பிராந்திய பொலிஸ் அதிபரால் வழங்கப்பட்ட உத்தரவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதையடுத்து சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டப்படி பிராந்திய பொலிஸ் அதிபரால் வழங்கப்பட்ட உத்தரவை ஏற்க முடியாது ஒரு நபரை தடுத்து வைக்க பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு மட்டுமே உத்தரவு வழங்கும் தகுதி உண்டு அவர் உத்தரவு வழங்கிய பின் பொலிஸ் மா அதிபர், அந்நபரை எங்கே தடுத்து வைக்கலாம் என்பது பற்றிகூறமுடியும் ஆகவே பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரால் வழங்கப்பட்ட தடுப்புச்சம்பந்தமான உத்தரவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் எனக்கோரினார்.

இதையடுத்து பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரால் வழங்கப்பட்ட உத்தரவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 19ம் திகதிக்குஒத்திவைத்தார்.

## சட்டத்தைப் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை எமக்குத் தெரிவித்தால் நாம் இப்போதும் நடவடிக்கை எடுக்கத் தயாராக வுள்ளோம். (சபையில் சலசலப்பு)

''சட்டத்தின் மீது நான் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். (சபையில் சிரிப்பு)

''சட்டத்தைப் பார்த்து சிரிக்காதீர்கள் சட்டம் மிகவும் பெறுமதியானது. சட்டம் கௌரவிக்கப்பட வேண்டியது. எனது அமைச்சைப் பொறுத்தவரை இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது'' என்றார்.

இ - வெ)

## வவனியாவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதியில் வந்து குடியேற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்.

''தங்களின் தலைமையின் கீழ் ஒரு தார்மீக அரசை இந்த நாட்டிலேஉண்டாக்க நாங்கள் செய்துள்ள பங்களிப்பை தாங்கள் மறந்து விடமுடியாது.

''1958ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இன்று வரை இங்கு குடியேறியுள்ள இந்திய வம்சாவளி மக்களை எந்தவித காரணமுமின்றி வடக்கு - கிழக்கு மாகாண அரச அதிபர்களுக்கு மேற்படி மக்களை காணிகளை விட்டு வெளியேறுமாறு தாங்கள் பணித்துள்ளதாக ஒவ்வொரு அரச அதிபர் பிரிவிலுள்ள அதிகாரிகள் எங்களை காணிகளிலிருந்து வெளியேறுமாறு வற்புறுத்துகிறார்கள். ஆகவே நாட்டுப் பற்றுள்ளவர்களும், உங்களின் தார்மீக ஆட்சியின் மேல் அசையாத நம்பிக்கை வைத்துள்ள இந்திய வம்சாவளி மக்களை அவர்களால் திருத்தப்பட்ட காணிகளிலிருந்து வெளியேற்றுது சம்பந்தப்பட்ட அரசஅதிகாரிகளுக்கு உத்தரவு பணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்'' என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. தொ. க. தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான், பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா ஆகியோருக்கும் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## சமரசப் பேச்சு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி சமரசப்பேச்சுக்கள் தோல்வி அடைந்தால் தி. மு. க இலங்கையை ஆக்கிரமிக்கும்! இதனால் ஏற்படும் நிலையை எதிர்நோக்க தேசப்பற்றுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் ஆயுதங்கள் வழங்கி இராணுவப்பயிற்சி அளிக்கவேண்டும்'' என்றார்.

''இந்த நாட்டைப்பிரிப் பிரிப்பதை தடுக்க கிராமிய மட்டத்தில் குழுக்களை அமைக்கவேண்டும் என்றும் திரு. பண்டாரநாயக்கா கேட்டுக் கொண்டார். (கு)

## வெற்றி பெறும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றசபை முதல்வர் அலுவலகம், பாராளுமன்ற எதிர்க்கட்சி முதல்வரின் அலுவலகம் முதலியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு பற்றி பேசுகையிலே கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தை சுத்தப்படுத்துவது பற்றி பொல்காவலை எம். பி இங்கு கூறினார். சிராவஸ்திக்கு அருகேயிருந்த எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் கடந்த ஜூலை கலவரத்தின் போது தீவைக்கப்பட்டது. இதன் மூலம் பெரும் நஷ்டம் ஏற்பட்டது இந்த அநியாயமான நடவடிக்கை குறித்து புதிய எதிர்க்கட்சித்தலைவர் விசாரிக்க வேண்டும்!

''எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தை சுத்தப்படுத்துவது எதிர்க்கட்சித்தலைவரின் வேலை. அதைஅவர் கவனிப்பார்

''கலுலக்கி'' அல்லது பெர்ணாண்டோ என்பவர் தான் அந்த ஆர்ப்பாட்டத்தைத் தூண்டினாரென்று முன்னர் கூறப்பட்டது. போதிய சாட்சியமில்லாததால் வழக்குத் தொடரப்படவில்லை' என்றார்.

(இ - வெ)

## வன்செயல்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பாவிக்கப்பட்ட பாடசாலைகளை திருத்த 35 லட்சம் ரூபாவும் பயன்படுத்தப்பட்டது.

101 கைத்தொழில் நிலையங்களும், 1263 வர்த்தகஸ்தாபனங்களும், 5044 வீடு,சொத்துக்களும் பாதிக்கப்பட்டதாக நவம்பர்' 22-ம் திகதிவரை 'ரெபியா'வுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது.'' (இ-கு)

## அநுரா மறுப்பு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராபண்டாரநாயக்கா கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் புலிகள் என்று பொல்காவலை எம் பி. திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி குற்றஞ்சாட்டியதற்கு பதிலளிக்கையில் திரு. அநுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுபற்றி அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழர் ஒருவர் செயலாளராக இருப்பது எல்லாவற்றையும் விட மேலானது. நான் எதிர்க்கட்சித் தலைவரானதும் திரு. பேரின்பநாயகம் தனது ராஜினமாவை கையளித்தார். இன்னொருவரை நியமிக்கும் வரை பதவியில் இருக்குமாறு அப்போது கேட்டேன். அவர் நேர்மையானவர் தகுதியுள்ளவர், 23 வருட சேவையாற்றியவர் இவரைவெளியேற்ற வேண்டிய அவசியம் இல்லை'' (கு)

## எதிர்க்கட்சித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தும் எதிர்க்கட்சித்தலைவரின் செயலாளராக இருக்கிறார். அமிர்தலிங்கத்தின் மைத்துனர் தங்கராஜாவும் தொடர்ந்தும் அங்கேயே பணியாற்றுகிறார்.''

இவ்வாறுபொல்காவலை எம். பி திரு. சுனில் ரஞ்சன்ஜெயக்கொடி நேற்றுப்பாரளுமன்றத்தில் ஜனாதிபதி, உயர்நீதிமன்ற நீதியரசர்கள், அமைச்சரவை அலுவலகம், பாராளுமன்றம், கணக்காய்வாளர் நாயகம், பாராளுமன்ற சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சி முதல்வரின் அலுவலகம் முதலியனவற்றிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிப் பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் அவர்களுடன் ஏதாவது ஒப்பந்தம் செய்து இருக்கிறார்களோ தெரியவில்லை.

அரசாங்கக்கட்சியின் பின்வரிசை உறுப்பினர் என்ற ரீதியில் எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் கொடுக்கும்ஆலோசனை எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தை சுத்தப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

''பாராளுமன்றத்தில் தேசியக்கொடி குறைந்த உயரத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. இன்னும் உயர்ந்த இடத்தில் அதனைப்பறக்கவிடவேண்டும்'' என்றார்.

## ஆஸ்பத்திரியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் எதிரிகளுக்கும் இடையில் கோபதாபங்கள் இல்லை. எனக்கும் எதிரிகளுக்கும் இடையில் கோபதாபங்கள்இல்லை. சம்பவதினம் 20, அல்லது 25பேர் கொண்ட கோஷ்டிவந்தது. எல்லோருடைய கைகளிலும் இரும்பும், வில்லுத்தகடுகளும் வாள்களும் இருந்தன. சம்பவம் நடந்த கடையடியில், ஒரு வெளிச்சமும் இல்லை நான் பொலிசாருக்கு கொடுத்த வாக்கு மூலத்தில் எதிரிகள் கடையை உடைத்து சாமான்களைஎடுத்து வீசினார்கள் என்று கூறியிருந்தால் அது பிழை. ஏனென்றால் நான் அதைக் காணவில்லை. யார் யார் என்ன ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று கூறமுடியாது.

விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டது. (க)

## நாவலர் நூல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்களும் திரு க. இளையதம்பி அவர்களும் நாவலர்பெருமானிலும் நாவலர் பெருமான்பணிகளிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்கள், அவர்களது ஆத்மா சாந்தி உறுவதாக.

நாவலர் சபையில் பல துறைப்பட்டதான பணிகள் ஆற்றிவரும் தொண்டர்கள் அனைவருக்கும் திருவருள் கைகூடுவதாக என்று திருமுருகன் திருவடிகளை வேண்டுதல் செய்வோமாக.''


## மரண அறிவித்தல்

### சகோ. நீ. அந்தோனிப்பிள்ளை

சக்கோட்டை இம்மானுவேல் சுவிஷேச சபையைச் சேர்ந்த சகோ. நீ. அந்தோனிப்பிள்ளை அகாலமரணமடைந்துவிட்டார். இன்று 29-11-83 செவ்வாய்காலை 10-00 மணியளவில் இம்மானுவேல் சுவிஷேச இல்லத்தில் ஆராதனையின்பின் நல்லடக்கத்திற்காக அல்வாய் வடக்கு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தாய் - மனைவி - பிள்ளைகள் - சகோதரங்கள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள் - சபையினர் - உற்றார் உறவினர் அனைவரும்

இம்மானுவேல் சுவிஷேச இல்லம்
சக்கோட்டை, அல்வாய்.

10233



## மரண அறிவித்தல்

### தியோ பத்திநாதர்

(சமாதான நீதவான் 'யாழ். வாடிவீட்டு அதிபர்)

காலமானார்



அன்னாரின் பிரேத அடக்கம் 29-11-83 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு அவரது 3ம் குறுக்குவீதி இல்லத்திலிருந்து நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

10238 மனைவி மக்கள் மருமக்கள்



## மரண அறிவித்தல்

### சுருவில், திருமதி

### வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை

சுருவிலைச்சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற வேலுப்பிள்ளையின் அருமை மனைவியும், சண்முகநாதன் (ஊர்காவற்றுறை அரசாங்க வைத்தியசாலை), சாம்பசிவம் (கொழும்பு மாணிக்கம் பிரதர்ஸ்), பதுமநிதி, பத்மாவதி, விஸ்வநாதன் ஆகியோரது அன்புத் தாயாரும். சரோஜினி, காந்திமதி, சொர்ணலிங்கம் (மத்திய வங்கி), ஜெகநாதன் (வர்த்தகர் கொழும்பு), ஆகியோரது அன்புமாமியாரும். சிற்றம்பலத்தின் சகோதரியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-11-83) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரவுண் வீதி, முதலாம் ஒழுங்கை 37/20 இலக்க இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப் படும்.

10239


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி, 33-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49,Telephone: 22389 —14126.